


புதுவை அரசின் திட்டம் மற்றும் ஆராய்ச்சி துறை சார்பில் நடந்த உலக சிக்கன நாள் விழாவில் முதல்–அமைச்சர் ரங்கசாமி கலந்து கொண்டு கேடயம் வழங்கிய போது எடுத்த படம். அருகில் திட்டம் மற்றும் ஆராய்ச்சி துறை இயக்குநர் கனகசபை, அஞ்சலக முதுநிலை கண்காணிப்பாளர் இன்பழகன் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

# தனியாரிடம் முதலீடு செய்து பணத்தை இழக்க வேண்டாம்

## முதல்–அமைச்சர் ரங்கசாமி அறிவுரை

புதுச்சேரி, அக். 31–

தனியாரிடம் முதலீடு செய்து சேமித்த பணத்தை இழக்க வேண்டாம் என்று முதல்–அமைச்சர் ரங்கசாமி கூறினார்.

### சிக்கனநாள் விழா

புதுவை அரசின் திட்டம் மற்றும் ஆராய்ச்சித்துறை சார்பில் உலக சிக்கன நாள் விழா திட்டத்துறை பயிற்சிக்கூடத்தில் நேற்று நடந்தது. திட்டம் மற்றும் ஆராய்ச்சித்துறை இயக்குனர் கனகசபை வரவேற்று பேசினார்.

விழாவில் முதல்–அமைச்சர் ரங்கசாமி கலந்துகொண்டு அதிக அளவு சிறுசேமிப்பு நிதி திரட்டிய அரசு துறைகளுக்கு சுழற்கேடயங்களை வழங்கினார். இதன்படி சுகாதாரத் துறை முதல் பரிசினையும், வணிகவரித்துறை 2–வது பரிசினையும், கூட்டுறவுத்துறை 3–வது பரிசினையும், பொதுப் பணித்துறை 4–வது பரிசினையும் பெற்றன.

நாவலர் நெடுஞ்செழியன் பள்ளி, வெங்கடசுப்பாரெட்டியார் அரசு தொழில்நுட்ப பள்ளி ஆகியவற்றுக்கும் சுழற் கேடயங்கள் வழங்கப்பட்டன. மேலும் வேளாண்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பள்ளிக்கல்வித்துறை, கணக்கு மற்றும் கருவூலத்துறை, வ.உ.சி. பள்ளி ஆகியவற்றுக்கும் எல்.ஐ.சி. முகவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

### ரங்கசாமி

விழாவில் முதல்–அமைச்சர் ரங்கசாமி பேசியதாவது:–

இன்றைய தினம் நாட்டில் சேமிப்பு என்பது மிகவும் அவசியம். இந்த சேமிப்பானது நமது முதுமை காலத்தில் உதவும். சேமிப்பானது நாட்டின் வளர்ச்சிக்கும் உதவுகிறது. பொருளாதார மந்த நிலையின்போது நம் நாடு சரிவடையாமல் இருக்க இதுவும் ஒரு காரணம்.

கவர்ச்சிகரமான திட்டங்களை நம்பி மக்கள் தனியாரிடம் பணத்தை போட்டு ஏமாறுகிறார்கள். ஆனால் அரசுத்துறை நிறுவனங்களில் சேமிப்பதுதான் பாதுகாப்பானது. அஞ்சலகம், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் சேமிப்பதே பாதுகாப்பானது.

### தனியாரிடம் முதலீடு

சிறுசேமிப்பு மூலம் பெறப்படும் நிதியினால் வளர்ச்சிப்பணிகளை மேற்கொள்ளலாம். அது குறைந்து வருவது வருத்தத்திற்குரியது. சிறுசேமிப்பின் மூலம் நிறைய பேருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. முன்புபோல் சிறுசேமிப்பு நிதியும் உயரவேண்டும்.

நாம் அனைவரும் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கி கொள்ளவேண்டும். இந்த பழக்கத்தை மக்கள் அனைவரிடமும் எடுத்து செல்லவேண்டும். நமது பணம் பத்திரமாக இருக்கவேண்டும். அதிகப்படியான வட்டிக்கு ஆசைப்பட்டு தனியாரிடம் முதலீடு செய்து பணத்தை இழந்துவிடக்கூடாது.

இவ்வாறு முதல்–அமைச்சர் ரங்கசாமி பேசினார்.

விழாவில் அஞ்சலக முதுநிலை கண்காணிப்பாளர் இன்பழகன் உள்பட அரசுத் துறை இயக்குனர்கள், அதிகாரிகள், சிறுசேமிப்பு முகவர்கள் பலர் கலந்துகொண்டனர்.